முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண்.65/2018**

**IN**

**நிறைவேற்று மனு எண்.2/2005**

**IN**

**அசல் வழக்கு எண்.5/1996**

1. சின்னக்கணபதி
2. செல்லத்தாய் ... மனுதாரர்கள் /இ.பி.எண்.2/2005 மனுவில் 5, 8 எதிர்மனுதாரர்கள் / 8, 11 பிரதிவாதிகள்

**/எதிர்/**

1. களஞ்சியம் ... 1ம் எதிர்மனுதாரர் / இ.பி.எண்.2/2005 மனுவில் 1ம் மனுதாரர் / 1ம் வாதி

2. அந்தோணி
3. பாலசுப்பிரமணியன்
4. பெரியகணபதி
5. குருவம்மாள்
6. கருப்பாயி
7. லெட்சுமி
8. காசிராஜன் ... 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள் / இ.பி.எண்.2/2005 மனுவில் 1, 2, 4, 6, 7, 9, 10 எதிர்மனுதாரர்கள் / 1, 4, 7, 9, 10, 12, 13 பிரதிவாதிகள்

ராக்கன் (இறப்பு) ... 2ம் பிரதிவாதி

மாடசாமி (இறப்பு) ... 3ம் பிரதிவாதி

முத்துமாடத்தி (இறப்பு) ... 6ம் பிரதிவாதி

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:08:13 +0530

செல்லியம்மாள் (இறப்பு) ... இ.பி.எண்.2/2005 மனுவில் 2ம் மனுதாரர்/2ம் வாதி

கருப்பாயி (இறப்பு) ... இ.பி.எண்.2/2005 மனுவில் 3ம் எதிர்மனுதாரர் / 5ம் பிரதிவாதி

இம்மனுவானது 09.04.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.U.சீனிஅய்யா அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 2, 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள் பிரதான நிறைவேற்று மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாத உரைகளைக் கேட்டறிந்தும், மனு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 47–ன் படி, இவ்வழக்கில் 02.03.1988–ல் பிறப்பிக்கப்பட்டுள்ள முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் 08.11.2001–ல் பிறப்பிக்கப்பட்டுள்ள இறுதிநிலை தீர்ப்பாணையும் ஒரு (Inexecutable) தீர்ப்பாணை என தீர்மானித்து, அதன் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு எண்.2/2005 மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கக்கோரியும் மற்றும் இம்மனுவின் செலவுத்தொகை கோரியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **<u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u>** :–

மனுதாரர்கள் அசல் வழக்கில் 8, 11 பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கை இந்த 1ம் எதிர்மனுதாரரும், இறந்துபோன 2ம் வாதி செல்லியம்மாளும் சேர்ந்து பாகப்பிரிவினை பரிகாரம்கோரி தாக்கல் செய்தனர் என்றும், அசல் வழக்கில் 02.03.1988 தேதியில் முதல்நிலை தீர்ப்பாணையும், அதை அனுசரித்து 08.11.2001 தேதியில் இறுதிநிலை தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:08:20 +0530

என்றும், மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையின்படி, 1ம் எதிர்மனுதாரரும், இறந்துபோன 2ம் வாதியும் அவர்களுக்குரிய 2/12 பங்கை சுவாதீனம் பெற்றுக்கொள்ள வேண்டி நிறைவேற்று மனு எண்.2/2005 மனுவை தாக்கல் செய்து, நிறைவேற்று மனு நிலுவையில் இருக்கும்போது, 2ம் வாதியான செல்லியம்மாள் இறந்துபோகவே, அவருக்குரிய பங்கை 1ம் எதிர்மனுதாரருக்கு 06.10.1980 தேதியில் பதிவு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளபடி 1ம் எதிர்மனுதாரருக்கு தனித்த சுவாதீனம் கொடுக்க வேண்டி E.P.No.2/2005 மனுவும் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் பிராது தபசில் சொத்து விபரத்தில் 1வது தபசிலில் 1 முதல் 32 அயிட்ட சொத்துக்கள் விவரிக்கப்பட்டுள்ளது என்றும், 2வது தபசில் சொத்து விபரத்தில் 1 முதல் 39 அயிட்ட சொத்துக்கள் விவரிக்கப்பட்டுள்ளது என்றும், 3வது தபசில் சொத்து விபரத்தில் 1வது அயிட்டமாக 6 காளை மாடுகளும், 2வது அயிட்டமாக 30 ஆடுகளும், 3வது அயிட்டமாக 2 வண்டிகளும், 4வது அயிட்டமாக 5 எருமை மாடுகளும், 5வது அயிட்டமாக புரோநோட்டுக்கள், கொடுக்கல் வாங்கல்கள் என்றும் விவரிக்கப்பட்டும், 5வது அயிட்டம் சம்பந்தமாக வேறு வியாஜ்ஜியம் செய்து பரிகாரம் காண்பது சம்பந்தமாக மேற்குறிப்பும் கண்டு பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால், பிராது 1, 2 தபசில் சொத்துக்களை பொறுத்து மட்டும் E.P.No.2/2005 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு மத்தியில் பிராது 2வது தபசில் 21 முதல் 30 அயிட்ட சொத்துக்கள் நீக்கப்பட்டு, அதற்கு பதில் 21வது அயிட்டமாக சர்வே எண்.26/8 0.41.0 ஏ.1-01 என்றும், 22வது அயிட்டமாக சர்வே எண்.26/19 0.16.0 - ஏ.0-39.1/2, 23வது அயிட்டமாக சர்வே எண்.26/28 0.21.0 - ஏ.2.99 என்றும், பிராதில் சொத்து விபரம் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ள விபரமும் வழக்குப் பதிவேட்டைப் பார்வையிட்டாலே நன்கு துலங்கும் என்றும், ஆனால், இவ்வழக்கில் 02.03.1988ல் பிறப்பிக்கப்பட்டுள்ள முதல்நிலை தீர்ப்பாணையிலும், அதனை அனுசரித்து 08.11.2001ல் பிறப்பிக்கப்பட்டுள்ள இறுதிநிலை தீர்ப்பாணையிலும் பிராதின் தபசில் சொத்து விபரங்கள் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளபடி சொத்துவிபரங்கள் விவரிக்கப்படாமல் தவறுதலாக சொத்து விபரங்கள் விவரிக்கப்பட்டு மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையும், இறுதிநிலை தீர்ப்பாணையும் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், ஆய்வர் அவர்கள் மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையில் கண்ட 2வது தபசில் சொத்து விபரங்களில் காணாத

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:08:27 +0530

2 வது தபசில் 21 வது அயிட்டமான 26/8 ல் 0.41.0 – ஏக்கர் 1 செண்ட் 1, 22 வது அயிட்டமான 26/19 ல் 0.16.0 – ஏக்கர் 0 சென்ட் 39, 23 வது அயிட்டமான 26/28 ல் 0.21.0 – ஏக்கர் 2 சென்ட் 99 ஆகிய சொத்துக்களை தனது அறிக்கையில் முதல்நிலை தீர்ப்பாணைக்கு மாறுபட்டு காண்பித்துள்ளதற்கு தனது அறிக்கையில் எவ்வித விளக்கமும் குறிப்பிடவில்லை என்றும், ஆனால், மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையில் கண்ட விபரப்படி வாதிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய 2 வது தபசில் 23 வது இனம் சர்வே எண்.26/28 ல் 2 ஏக்கர் 99 சென்டும், 2 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட வேண்டிய 2 வது தபசில் 21 வது இனம் சர்வே எண்.26/8 ல் 1 ஏக்கர் 1 செண்டும், 2 வது தபசில் 22 வது இனம் சர்வே எண்.26/19 ல் 39 1/2 செண்டும், தபசில் விபரங்களாக பிராதில் 2 வது தபசில் 21 முதல் 23 அயிட்டங்களாக விவரிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால், மேற்படி 21 முதல் 23 அயிட்ட சொத்துக்கள் முதல்நிலை தீர்ப்பாணையிலோ, இறுதிநிலை தீர்ப்பாணையிலோ அல்லது நிறைவேற்று மனு எண்.2/2005 மனுவிலோ 2 வது தபசில் சொத்தில் சொத்து விபரங்களாக விவரிக்கப்படவில்லை என்றும், அதனால், 2 வது தபசில் 21 முதல் 23 அயிட்ட சொத்துக்களை பொறுத்து வாதிகள் மற்றும் 1 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்து மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்ற முடியாது என்பதால் மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையும், இறுதிநிலை தீர்ப்பாணையும் ஒரு Inexecutable டிகிரி என்றும், 1 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு எண்.2/2005 மனுவும் இறுதிநிலை தீர்ப்பணையில் கண்ட விபரப்படி மேற்படியாருக்கு ஒதுக்கப்பட வேண்டிய சொத்துக்களை சுவாதீனம் பெற வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி இ.பி.எண்.2/2005 மனுவிலும் மேற்படி முதல்நிலை தீர்ப்பணை, இறுதிநிலை தீர்ப்பாணையில் கண்ட விபரப்படியே சொத்து விபரங்கள் விவரிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால், மேற்படி இ.பி.எண்.2/2005 மனுவும் தவறான சொத்து விபரங்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் இறுதிநிலை தீர்ப்பாணையின்படி 1 ம் எதிர்மனுதாரருக்கு ஒதுக்கப்பட வேண்டிய சொத்துக்களை சுவாதீனம் கொடுக்கவும் சட்டப்படி இயலாது என்றும், மேலும், இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு இறுதிநிலை தீர்ப்பாணையின்படி ஒதுக்கப்பட வேண்டிய 2 வது தபசில் 21 முதல் 23 அயிட்ட சொத்துக்கள் பிராதில் சொத்து விபரமாக விவரிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு மாறுபட்டு தயார் செய்யப்பட்டுள்ள

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:08:34 +0530

முதல்நிலை தீர்ப்பாணையும், இறுதிநிலை தீர்ப்பாணையும் ஒரு Inexecutable டிகிரி என்றும், இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு இறுதிநிலை தீர்ப்பாணைப்படி ஒதுக்கப்பட வேண்டிய 1 வது தபசில் 5 வது இன சொத்தான சர்வே எண்.24/13 ல் கிணறு, மின்மோட்டார், மின் இணைப்பு ஆகியவையும், 2 வது தபசில் 3 வது இனச் சொத்தான சர்வே எண்.40/2 ல் கிணறும், பிராது சொத்து விபரத்திலும், முதல்நிலை தீர்ப்பாணை, இறுதிநிலை தீர்ப்பாணை மற்றும் இ.பி.எண்.2/2005 மனுவிலும் சொத்து விபரமாக விவரிக்கப்படாத நிலையிலும், அதனை பொறுத்து சுவாதீனம் கொடுக்க சட்டப்படி இயலாது என்றும், ஆகையால், இவ்வழக்கில் 02.03.1988–ல் பிறப்பிக்கப்பட்டுள்ள முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் 08.11.2001–ல் பிறப்பிக்கப்பட்டுள்ள இறுதிநிலை தீர்ப்பாணையும் ஒரு (Inexecutable) தீர்ப்பாணை என தீர்மானித்து, அதன் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு எண்.2/2005 மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கக்கோரியும் மற்றும் இம்மனுவின் செலவுத் தொகை கோரியும் இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :–

மனுதாரர்களின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை என்றும், மனுதாரர்கள் கோரும் பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதில்லை என்றும், இவ்வழக்குக்கு பிற்பாடு பிராதின் 2 வது தபசில் சொத்தில் 21 முதல் 30 அயிட்டச் சொத்துக்கள் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக 21 வது அயிட்டமாக சர்வே எண்.26/8 ல் உள்ள சொத்தும், 22 வது அயிட்டமாக சர்வே எண்.26/19 ல் உள்ள சொத்தும் 23 வது அயிட்டமாக சர்வே எண்.26/28 ல் உள்ள சொத்தும் சொத்து விவரமாக காண்பிக்கப்பட்டுள்ளது உண்மைதான் என்றும், மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள முதல்நிலை தீர்ப்பாணையும், இறுதிநிலை தீர்ப்பாணையும் சட்டப்படி நிறைவேற்றிக்கொள்ள இயலாத (in executable) தீர்ப்பாணைகள் என பிரஸ்தாபித்துள்ளது என்றும், இதன் கீழ்க்கண்ட காரணங்களினால் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், 1. பிராதின் 2 வது தபசில் 21 முதல் 30 அயிட்டங்களாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் இந்நீதிமன்ற சீர்திருத்த மனுவினால் நீக்கரவு செய்யப்பட்டுவிட்டன என்றும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:08:42 +0530

மேற்கூறிய 21 முதல் 30 அயிட்ட சொத்துக்களில் உள்ள புல எண்களையோ, அல்லது அதில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள விஸ்தீரணங்களையோ பிரிவினைக்கு உட்படக்கூடியதாக நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றும், மேற்கூறிய 21 முதல் 30 அயிட்டச் சொத்துக்களில் பங்கு பாகம் உள்ளதென்று யாருக்கும் இறுதிநிலை தீர்ப்பாணையில் ஒதுக்கப்படவில்லை என்றும், அதனால் பிராதின் 2 வது தபசில் 21 முதல் 30 வரையிலான நீக்கரவு செய்யப்பட்ட சொத்துக்கள் இவ்வழக்கில் எவ்வித பிரச்சனையும் ஏற்படுத்தக்கூடியதில்லை என்றும், 2. பிராதின் 2 வது தபசில் 21 முதல் 30 அயிட்ட சொத்துக்கள் நீக்கப்பட்ட பின்னீடு அதற்கு பதிலாக 21, 22 மற்றும் 23 அயிட்ட சொத்துக்களான புல எண்.26/8, 26/19, 26/28 ஆகிய சொத்துக்கள் பிரிவினைக்கு உகந்த சொத்துக்கள் என்று கணக்கில் கொள்ளப்பட்டு நீதிமன்ற ஆணையரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில்தான் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்புவிக்கப்பட்டுள்ளது என்றும், முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை ஆகியவற்றில் நீக்கரவு செய்யப்பட்ட சொத்துக்களான பிராதின் 2 வது தபசில் 21 முதல் 30 அயிட்டச் சொத்துக்கள், இந்நீதிமன்றம் தீர்ப்பாணைகளை தயார் செய்போது Over sight ஆக அந்த சொத்துக்கள் சொத்து விவரங்களாக காண்பிக்கப்பட்டிருந்தாலும் அது இறுதிநிலை தீர்ப்பாணையில் எவ்வித பாதிப்பையோ, தாக்கத்தையோ ஏற்படுத்தக் கூடியதில்லை என்றும், ஏனெனில் நீதிமன்ற ஆய்வர் அறிக்கையிலும் இறுதிநிலை தீர்ப்பாணையிலும் ஒவ்வொரு புலஎண்ணையும் கண்டறிந்துதான் அந்த புல எண்களின்படி பங்குதாரர்களுக்கு சொத்து பாத்தியப்பட்டதாகவே புலஎண்ணையும் விஸ்தீரணத்தையும் தெளிவுபட குறிப்பிட்டு பங்கு பாகம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், 3. 1ம் எதிர்மனுதார் மற்றும் அவளின் தாயாரான இறந்துபோன செல்லியம்மாளுக்கும் இறுதிநிலை தீர்ப்பாணையின் 1 வது நிபந்தனையில் குறிப்பிட்டுள்ளபடி ஆணையர் பிரிவினைக்கு உகந்ததாக எடுத்துக்கொண்ட மொத்த நிலமான 50 ஏக்கர் 48 செண்ட் நிலத்தில் 1–வது தபசில் 5 வது இனமான சர்வே எண்.24/13–ல் 6 ஏக்கர் 56 செண்டும் அதிலுள்ள கிணறும் மின்மோட்டாரும், மின்இணைப்பும் மற்றும் 2–வது தபசில் 9 வது இனமான சர்வே எண்.25/17–ல் உள்ள 1 ஏக்கர் 3 செண்டும், 2–வது தபசில் 36 வது இனம் என குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.57/7 ல் உள்ள 44 செண்டும் ஆக மொத்தம் 8 ஏக்கர் 40 செண்டு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:08:49 +0530

பாக்கியுள்ள 2 செண்டுக்கு ஈடாக 1ம் பிரதிவாதியை தவிர்த்து இதர பிரதிவாதிகள் செண்ட் 1க்கு ரூ.30/- வீதம் ரூ.60/- கொடுக்கவேண்டும் என்று முடிவாகியுள்ளது என்றும், 5. இறுதிநிலை தீர்ப்பாணையில் 2வது நிபந்தனையில் நீதிமன்ற ஆணையர் பிரிவினைக்கு உகந்ததாக எடுத்துக்கொண்ட 50 ஏக்கர் 48 செண்டில் 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கவேண்டிய 1/12 பங்குக்கு 2வது தபசில் 3-வது இனமான சர்வே எண்.40/2-ல் உள்ள 1 ஏக்கர் 78 செண்டும், அதில் உள்ள கிணறு 1-வது தபசில் 14 வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ள புல எண்.31/1-ல் உள்ள 46 செண்டும் 1-வது தபசில் 24 வது அயிட்டமான சர்வே எண்.159/1-ல் உள்ள 1 ஏக்கர் 96 செண்டும் ஆக மொத்தம் 4 ஏக்கர் 20 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், பாக்கியுள்ள 1 செண்டுக்கு 1ம் பிரதிவாதி பிற பிரதிவாதிகள் ரூ.30/-ஐ செலுத்தவேண்டும் என்று உத்தரவாகியுள்ளது என்றும், 6. இறுதிநிலை தீர்ப்பாணையின் 3வது ஷரத்தில் 1-வது தபசில் 25, 26, 27, 28, 29 மற்றும்32 அயிட்டங்களில் உள்ள விஸ்தீரணமும், 2-வது தபசில் 20 பி, 15, 16, 17, 18, 19, 20, 20 ஏ, 20 டி, 9 பி மற்றும் சீர்திருத்தம் செய்து சேர்க்கப்பட்ட புல எண்களான 26/8, 26/19 மற்றும் 26/28 ஆகியவற்றில் உள்ள மொத்த நிலம் 17 ஏக்கர் 46-1/4 செண்ட் என்று கணக்கில் கொள்ளப்பட்டு அதில் 1ம் எதிர்மனுதார் வாதிகளுக்குரிய 2 ஏக்கர் 91 செண்டுக்காக 2வது தபசில் 23வது இனமான 26/28-ல் உள்ள 2 ஏக்கர் 99 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், 7. இறுதிநிலை தீர்ப்பாணையின் 3வது நிபந்தனையின்படி கணக்கிடப்பட்ட 17 ஏக்கர் 46-1/4 செண்டில் 4வது நிபந்தனையாக 1ம் பிரதிவாதிக்கு கிடைக்க வேண்டிய 1/12 பங்குக்கு 2வது தபசில் 21 அயிட்டமான 26/8-ல் உள்ள 1 ஏக்கர் 1 செண்டும், 2வது தபசில் 22வது அயிட்டமான சர்வே எண்.26/19 ல் 39-1/2 செண்டும் ஆக 1 ஏக்கர் 40-1/2 செண்டும் வேறு சொத்தும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், இந்நீதிமன்றம் இறுதிநிலை தீர்ப்பாணையில் 3வது நிபந்தனையில் சீர்திருத்தம் செய்யப்பட்ட புல எண்.26/28-ம், 4வது நிபந்தனையின்படி சீர்திருத்தம் செய்யப்பட்ட புல எண்கள்.26/8, 26/19 ஆகிய புல எண்கள் சரிபார்க்கப்பட்டே பிரிவினைக்கு உட்படுத்தப்பட்டு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், 9. இந்நீதிமன்றத்தால் ஆணையராக நியமிக்கப்பட்ட மூத்த வழக்கறிஞர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களும் அவர்களின் அறிக்கையில் 2வது தபசில் 21 முதல் 30 வரை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:08:56 +0530

நீக்கப்பட்ட சொத்துக்களை தவிர்த்தும், அதற்கு பதிலாக புதிதாக சேர்க்கப்பட்ட புல எண்கள்.26/8, 26/19 மற்றும் 26/28 ஆகிய நிலங்களை கணக்கில் கொண்டுதான் ஒரு தெளிவான அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அந்த ஆய்வர் அறிக்கையின் அடிப்படையில்தான் இந்நீதிமன்றம் வ.வி.எண்.109/1996-ல் 08.11.2001-ல் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்புவித்துள்ளது என்றும், அந்த இறுதிநிலை தீர்ப்பாணையில் ஆணையரின் அறிக்கை ஒரு பாகமாக இணைக்கப்படவேண்டும் என்ற 6 வது நிபந்தனையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆதலால் மேற்படி மனுவில் பிறப்புவிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணை ஒரு நிறைவேற்றத்தக்க ஒரு executable decree என்றும், 10. இந்நீதிமன்றம் பிறப்புவித்த இறுதிநிலை தீர்ப்பாணையும் நீதிமன்ற முத்திரைத்தாள்கள் அல்லாத ரூ.375/- மதிப்புள்ள நீதிமன்றம் சாரா முத்திரைத்தாள்களில் தயார் செய்யப்பட்டுள்ளது என 7 வது நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், உண்மையிலேயே மனுதாருக்கு முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலைதீர்ப்பாணை ஆகியவற்றில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அதை உரியமுறையில் மேல்முறையீடு செய்துதான் பரிகாரம் தேடிக்கொள்ள இயலுமே தவிர உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 47 ன்கீழ் புதிதாக பரிகாரம் தேடிக்கொள்ள இயலாது என்றும், மேற்படி பிரிவின் பொருண்மை மனுதார்களின் கட்சிக்கு பொருந்தக்கூடியதில்லை என்றும், 11. மனுதார்கள் தரப்பில், இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்புவிக்கப்பட்ட காலமான 08.11.2001 லிருந்து 17 வருடங்கள் கழித்து பின்னினைவாகவும், காலப்பிற்பாடாகவும், உள்நோக்கம் கொண்டும் இவ்வழக்கின் தீர்ப்பாணையை நிறைவேற்றுக்கொள்ள விடாது தடுக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் காலநீடிப்பு செய்யவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 12. 1ம் எதிர்மனுதார் 62 வயதுடைய ஒரு மூத்த குடிமகள் (Senior Citizen) என்றும், மனுதார் தரப்பில் காலம் தாழ்த்தினால் முறையாக பெறப்பட்ட தீர்ப்பின் பலனை பயனற்றதாக்கிவிடலாம் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த தப்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 13. இவ்வழக்கின் முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை ஆகியவற்றில் சொத்துக்கள் தவறுதலாக, சீர்திருத்தம் செய்து நீக்கப்பட்ட சொத்துக்களும் இடம் பெற்றிருந்ததாலும் அவ்விதம் நீக்கப்பட்ட சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் அவர்கள் பிரிவினையின்போது கணக்கில் கொள்ளாததாலும், நீக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:09:02 +0530

இந்நீதிமன்றமும் தரப்பினர்களுக்கு பங்கு பாகம் ஒதுக்கீடு செய்யாததாலும், மேற்படி சொத்துக்களைப் பொறுத்து இந்நீதிமன்றம் எவ்வித உத்தரவும் பிறப்புவிக்காததாலும், முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையில் நீக்கப்பட்ட சொத்துக்கள் தவறுதலாக இடம்பெற்றுவிட்டதால் அவ்விதமான நடைமுறை குறைபாடு சட்டப்படி பிறப்புவிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றிக் கொள்வதை எவ்விதத்திலும் தடை செய்யக்கூடியதில்லை என்றும், 14. மனுதாருக்காக தற்போது மனுவை தாக்கல் செய்துள்ள மூத்த வழக்கறிஞர் திரு. சி. செந்திகுமார் அவர்களே இவ்வழக்கில் ஆரம்பத்தில் ஆணையராக நியமிக்கப்பட்டு உசிலங்குளம் கிராமத்தில் உள்ள புதிதாக சேர்க்கப்பட்ட புல எண்களான 26/8, 26/19, மற்றும் 26/28 ஆகிய புல எண்களில் கண்ட நிலங்களின் வழிகாட்டுதல் மதிப்பை கொடுக்கக்கோரி சங்கரன்கோவில் சார்பதிவாளர் அவர்களுக்கு கடந்த 15.09.1999 தேதிய கடிதத்தை எழுதியுள்ளார்கள் என்றும், மேற்படி சார்பதிவாளர் அவர்களும் 06.10.1999 தேதிய கடிதப்படி வழக்கறிஞர் திரு.சி.செந்திகுமார் அவர்களுக்கு மேற்கூறிய மூன்று புல எண்களின் வழிகாட்டுதல் மதிப்பையும் தெரிவித்துள்ளார்கள் என்றும், எனவே அதே வழக்கறிஞர் அவர்கள் தற்போது மாறுபட்டு கட்சி செய்ய முயல்வது நியாயத்திற்கு ஏற்புடையதில்லை என்றும், 15. 1ம் எதிர்மனுதார் தாக்கல் செய்துள்ள நிறைவேற்றுதல் மனு எண்.2/2005–ல் நீக்கரவு செய்யப்பட்ட சொத்துக்களை ஒப்படைப்பு கேட்டு தாக்கல் செய்திருப்பதில்லை என்றும், இறுதிநிலை தீர்ப்பாணையில் எந்த சர்வே எண், எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்து 1ம் எதிர்மனுதாருக்கு (வாதிக்கு) ஒதுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த சொத்துக்களைதான் சுவாதீனம் பெற பிரதான நிறைவேறுதல் மனு சரியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 16. இறுதிநிலை தீர்ப்பாணையின் 1வது நிபந்தனையின்படி புல எண்.24/13ல் உள்ள 6 ஏக்கர் 56 செண்ட் 1வது தபசில் 5வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், நீதிமன்ற ஆணையர் பிரிவினை செய்ய சொத்துக்களை நேரில் பார்வையிட்டபோது அந்த புல எண்ணில் கிணறு, மின்மோட்டார், மின்இணைப்பு ஆகியவை இருந்தது கண்டு அவற்றின் நட்பு திட்பு பார்த்தே கிணறு மின்மோட்டார் ஆகியவற்றை 1ம் எதிர்மனுதாருக்கு வழங்கிட பரிந்துரை செய்துள்ளார்கள் என்றும், சட்டகோட்பாடுகளின்படி கிணறு அதற்கான பாசான ஆதாரம் பெறும் நிலங்களுடன் தான் செல்லவேண்டும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:09:09 +0530

என்றும், இரண்டையும் தனித்தனியாக பிரிக்க இயலாது என்றும், மேற்படி வகையில் ஒதுக்கப்பட்டதற்கு மனுதார்கள் தரப்பில் நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு எவ்வித ஆட்சேபணையும் இந்நீதிமன்றத்தில் இறுதிநிலை தீர்ப்பாணைக்கு முன்னர் தாக்கல் செய்திருப்பதில்லை என்றும், எனவே காலம் கடந்து பொய்கட்சிக்காக மனுதார் கிணறு, மின்மோட்டார், மின்இணைப்பு காண்பிக்கப்படவில்லை என்று பொய்கட்சி செய்துள்ளார் என்றும், 17. 2 வது தபசில் 3 வது அயிட்ட சொத்தாக புல எண்.40/2 காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த புல எண்ணையும் இந்நீதிமன்ற ஆய்வர் பார்வையிட்டபோது அதில் கிணறு இருந்ததால் சட்டப்படி நிலத்துடன் கிணறும் செல்லவேண்டும் என்றுதான் அதையும் ஆய்வர் அறிக்கையில் குறிப்பிட்டு அந்த அறிக்கையை இந்நீதிமன்றம் சரியாக பரீசீலனை செய்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்புவித்துள்ளது என்றும், அதற்கும் மனுதார்கள் தரப்பில் ஆட்சேபணைகள் தாக்கல் செய்யவில்லை என்றும், இந்நீதிமன்றம் பிறப்புவித்த முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை ஆகியவைகள் மற்றும் 1ம் எதிர்மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிறைவேறுதல் மனு எண்.2/2005 ம் சட்டப்படி சரியானதாகும் என்றும், அவைகளின் செல்லும் தன்மை குறித்து எவ்வித குறைபாடும் கிடையாது என்றும், இந்நீதிமன்றத்தில் இந்த 1ம் எதிர்மனுதார் இறுதிநிலை தீர்ப்பாணையின்படி அவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களைத்தான் சுவாதீனம் பெற பிரதான நிறைவேறுதல் மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், தீர்ப்புக்கு முன்னர் நீக்கரவு செய்யப்பட்ட சொத்துக்களில் பங்குபாகம் கோரவில்லை என்றும், பிரதான நிறைவேறுதல் மனு இந்நீதிமன்றத்தில் கடந்த 13.01.2005-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நீதிமன்றமும் கடந்த 08.02.2007-ல் Delivery by என்று உத்தரவு பிறப்புவித்து 26.03.2007 ல் வாய்தா ஏற்படுத்தி உத்தரவிட்டுள்ளது என்றும், அவ்விதம் இந்நீதிமன்றம் ஒப்படைப்பு உத்தரவு பிறப்புவிக்கப்பட்டு கடந்த 13 வருடங்களாக 1ம் எதிர்மனுதாரால் ஒப்படைப்பு பெற முடியாதபடி பிரதிவாதிகளால் நாள் கடத்தப்பட்டு வரப்பட்டுள்ளது என்றும், மனுதார் உட்பட இதர சில எதிர்மனுதார்கள் நிறைவேறுதல் மனுவிற்கும் இறுதிநிலை தீர்ப்பாணை சொத்து விவரத்திற்கும் வேறுபாடு உள்ளதாக சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் A.S.No.67/2003 என மேல்முறையீடு தாக்கல் செய்திருந்ததில், அந்த மேல்முறையீடு கடந்த 23.01.2004 ல் தள்ளுபடி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:09:20 +0530

செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் மீது எவ்வித மேல்முறையீடும் செய்து தடை உத்தரவு ஏதும் பெறப்படவில்லை என்றும், அது சம்பந்தமாக இந்நீதிமன்றம் கடந்த 08.02.2007 ல் ஒரு விரிவான உத்தரவை பிறப்புவித்துதான் ஒப்படைப்பு உத்தரவு பிறப்புவித்துள்ளது என்றும், அந்த உத்தரவு மனுதார்களை கட்டுப்படுத்தக்கூடியதாகும் என்றும், அந்த உத்தரவும் இம்மனுவைப் பொறுத்து மறுப்புத்தடை என்ற கோட்பாட்டை ஏற்படுத்தக்கூடியதாகும் என்றும், மனுதார்களுக்கு முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை ஆகியவற்றில் இந்நீதிமன்றம் தீர்ப்பாணை தயாரிக்கும் போது ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அந்த குறைபாடுகளை உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 152-ன்படி சீர்திருத்தம் செய்துகொள்ளத்தான் பரிகாரம் கோர இயலும் என்றும், உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 153, தீர்ப்பாணைகளில் சொத்துவிவரங்களை தவறாகவோ, அல்லது குறைபாடு உள்ளதாகவோ குறிப்பிடப்பட்டு விட்டால், அதை இந்நீதிமன்றமே எந்த நேரத்திலும் வழக்கின் தன்மையை கருதி சரிசெய்து கொள்ளும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உள்ளது என்றும், எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் E.A.No.64/2018 மனுவில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையை இம்மனுவின் எதிருரையாக ஏற்றுக் கொள்ளக்கோரி 01.08.2018 தேதியில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. E.A.No.64/2018 மனுவின் எதிருரையில் இம்மனு தொடர்பாக கூறப்பட்டுள்ள ஆட்சேபணைகளின் சுருக்கம் :-</u>

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றும், மனுதாரர்கள் மிகவும் காலப்பிற்பாடாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அசல் வழக்கில் இடைநிலை மனு எண்.109/1996 மனுவில் 08.11.2001 தேதியில் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணை உத்தரவின் பேரில், சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.67/2003 என மேல்முறையீடு செய்யப்பட்டதில் மேற்படி மேல்முறையீடு 23.01.2004 ல் தள்ளுபடி செய்யப்பட்டதை அனுசரித்து 3 ம் எதிர்மனுதாரரால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:09:26 +0530

S.A.(MD)No.109/2007 என இரண்டாவது மேல்முறையீட்டு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி இரண்டாவது மேல்முறையீடும் நாளது தேதியிலும் நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கப்பட்டால், மேற்படி மேல்முறையீட்டின் சொத்து விவரங்களும் இறுதிநிலை தீர்ப்பாணையின் தன்மையும் முற்றிலும் மாறுபடுவதுடன் இறுதிநிலை தீர்ப்பாணையில் உபயதரப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களின் தன்மை, விஸ்தீரணம் அனைத்தும் மாறுபடக்கூடியதாய் இருக்கிறது என்றும், மேலும், இம்மனு அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இரண்டாவது மேல்முறையீடு பயனற்றுப்போவதுடன் அதன் தன்மையும் முற்றிலும் மாறுபடக்கூடும் என்றும், மிகுந்த பொருள் செலவும் ஏற்படக்கூடும் என்றும், இந்த மனுதாரர்களும், 1ம் எதிர்மனுதாரர்/வாதியும் வஞ்சககூட்டு சேர்ந்து கொண்டு பொய்யான விபரங்கள் கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

5) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1, 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.4 மற்றும் வழக்கு கோப்பு, மனுதாரர்கள் மற்றும் 1, 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாத உரைகள் ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன. மேலும், மனுதாரர்கள் தரப்பில் 2013 (4) L.W 224 என்ற முன்தீர்ப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்மனுவின் 1வது எதிர்மனுதாரர் தரப்பில் 2014 (1) MLJ 851, 2015(4) LW 67, 2015 (2) MWN (Civil) 564 ஆகிய முன்தீர்ப்புகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

6) மனுதாரர்களால் இம்மனுவானது இவ்வழக்கில் 02.03.1988–ல் பிறப்பிக்கப்பட்டுள்ள முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் 08.11.2001–ல் பிறப்பிக்கப்பட்டுள்ள இறுதிநிலை தீர்ப்பாணையும் ஒரு (Inexecutable) தீர்ப்பாணை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:09:34 +0530

என தீர்மானித்து, அதன் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு எண்.2/2005 மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இவ்வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் 1வது எதிர்மனுதாரர்/1வது வாதியால் பிராது தபசில் சொத்து விபரத்தில் 1வது தபசிலில் 1 முதல் 32 அயிட்ட சொத்துக்கள் விவரிக்கப்பட்டிருந்தது என்பதும், 2 வது தபசில் சொத்து விபரத்தில் 1 முதல் 39 அயிட்ட சொத்துக்கள் விவரிக்கப்பட்டிருந்தது என்பதும், அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது பிராதின் **2வது தபசிலில் இருந்த 21 முதல் 30** வரையிலான அயிட்டங்கள் வாதிகளால் நீதிமன்ற அனுமதியுடன் நீக்கப்பட்டு, நீக்கப்பட்ட அயிட்டங்களுக்கு பதிலாக **21, 22, 23 அயிட்டங்களாக S.No.26/8, 26/19, 26/28** ஆகிய சொத்துக்கள் வழக்குரையில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதும், அசல் வழக்கில் 02.03.1988 அன்று முதல்நிலை தீர்ப்பாணை (Preliminary Decree) தென்காசி சார்பு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், 08.11.2001 அன்று இறுதிநிலை தீர்ப்பாணை (Final Decree) இ.ம.எண்.109/1996 ல் சங்கரன்கோவில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், இறுதிநிலை தீர்ப்பாணை கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.109/1996 ல் நீதிமன்ற ஆணையரால் திருத்தப்பட்ட பிராதின் 2 வது தபசில் சொத்து விபரங்களான S.No.26/8, 26/19, 26/28 குறித்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணை சங்கரன்கோவில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், இருப்பினும், முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணைகளில் பிராது 2ம் தபசில் சொத்து விபரத்தில் திருத்தப்பட்ட சொத்து விவரங்கள் குறிப்பிடப்படாமல் திருத்ததிற்கு முன்பு உள்ள 21 முதல் 30 அயிட்டங்கள் இடம்பெற்றுள்ளன என்பதும், இறுதிநிலை தீர்ப்பாணைக்கு எதிராக இம்மனுவின் மனுதாரரால் மாண்புமிகு சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட A.S.No.67/2003 23.01.2004 அன்று தள்ளுபடி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:09:41 +0530

செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி தள்ளுபடி தீர்ப்புக்கு எதிராக இம்மனுவின் மனுதாரரால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட S.A.MD.No.109/2007 ஆனது 06.03.2026 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி E.P.No.2/2005 என்ற நிறைவேற்று மனுவை தாக்கல் செய்து 08.02.2007 ல் ஒப்படைப்பு (delivery) உத்தரவு இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் (Admitted Facts) ஆகும்.

8) முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையில் திருத்தம்செய்யப்பட்ட சொத்து விபரங்களை குறிப்பிடாமல் பழைய சொத்து விவரங்கள் தவறுதலாக இடம்பெற்றிருப்பதால், மேற்படி தீர்ப்பாணைகள் "Inexecutable Decree" ஆகிவிடுமா? இல்லையா? என்பதை இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய முக்கியமான பிரச்சினை ஆகும்.

9) இந்நிலையில், இந்நீதிமன்றமானது இறுதிநிலை தீர்ப்பாணையின் பரிசீலனையில் இருந்து, இறுதிநிலை தீர்ப்பாணையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு எந்த சர்வே எண், எந்த விஸ்தீரணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பதையும், இறுதிநிலை தீர்ப்பாணை கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.109/1996 ல் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை இரண்டிலும் திருத்தம் செய்யப்பட்ட **சரியான புல எண்களான 26/8, 26/19, 26/28** ஆகிய சொத்துக்கள் கணக்கில் கொண்டு பங்கீடு செய்யப்பட்டிருப்பது தெரியவருகிறது.

10) முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை தயாரிக்கும்போது நீக்கப்பட்ட சொத்துக்கள் மேற்படி தீர்ப்பாணைகளின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருப்பது ஒரு நடைமுறை குறைபாடே தவிர, முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையின் சாராம்சத்தையோ அல்லது பங்கீட்டையோ பாதிக்கவில்லை என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:09:48 +0530

11) முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையில் உள்ள தபசில் சொத்துக்கள் தொடர்பான தவறுகள் Section 152 அல்லது 153 நமது உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் மட்டுமே திருத்தப்படக்கூடியவை ஆகும். இவ்வழக்கின் முதல்நிலை தீர்ப்பாணை மாண்புமிகு தென்காசி சார்பு நீதிமன்றத்தாலும், இறுதிநிலை தீர்ப்பாணை மாண்புமிகு சங்கரன்கோவில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தாலும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது இவ்வழக்கு நிறைவேற்றுதல் நிலையில் இந்நீதிமன்றத்தின் முன் உள்ளது. இம்மனுவில் நமது உரிமையியல் நடைமுறை சட்டம் Section 47–ன் கீழ் நிறைவேற்றத்தன்மை மட்டுமே பரிசீலிக்கப்பட வேண்டிய நிலையில், முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணைகளில் திருத்தம் மேற்கொள்வது இம்மனுவின் எல்லைக்குள் வருவதில்லை.

12) மேலும், தீர்ப்பாணையில் காணப்படும் தபசில் சொத்து விவரப் பிழைகள் தீர்ப்பின் சாராம்சத்தையோ அல்லது தரப்பினருக்கு ஒதுக்கப்பட்ட பங்கீட்டையோ மாற்றாத வெறும் clerical / accidental errors மட்டுமே ஆகும். இத்தகைய பிழைகள் இருப்பதால் மட்டும் தீர்ப்பாணை நிறைவேற்ற இயலாத (Inexecutable) தீர்ப்பாணையாக மாறாது.

13) மேலும், இந்நிலையில், இம்மனுவின் மனுதாரரால் இறுதிநிலை தீர்ப்பாணைக்கு எதிராக நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட S.A.MD.No.109/2007 ல் நமது மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பின் Paragraphs 6, 7, 8, 9 ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது.

> "............6. Per contra, the learned counsel for the respondents submitted that the final decree was passed based on the consent given by all the parties for the report submitted by the Advocate Commissioner. Hence consent having been given, cannot be now sought to be withdrawn by means of raising certain grounds on merits. Therefore, the learned counsel for the respondents

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:09:55 +0530

sought for dismissal of this second appeal.

7. On carefully going through the final decree as well as the judgment passed by the appellate Court, it is seen that no one raised any objections for the report that was submitted by the Advocate Commissioner along with the sketch. Therefore, the final decree was passed based on such consent given by the parties. In view of the same, the appellate Court has rightly held that once the parties have consented that the final decree can be passed based on the report of the Advocate Commissioner, there is no question of going into the merits of the case.

8. The ground that was raised by the learned counsel for the appellant cannot be dealt with in a second appeal. If no objection had been given and if the parties have consented for passing of the final decree based on the report of the Advocate Commissioner, the same cannot be challenged on the merits of the case. If really such consent had been given without the concurrence of the appellant, the appellant should have gone before the trial Court and sought for the review of the final decree. This has not been done and curiously, the appellant is only challenging the final decree on merits before the appellate Court and before this Court.

9. In the light of the above discussion, this Court does not find any substantial question of law involved in the present second appeal. Accordingly, the second appeal stands dismissed. Consequently, connected civil miscellaneous petition is closed. No costs......"

14) இதிலிருந்து, நமது மாண்புமிகு உயர்நீதிமன்றம் **"இறுதிநிலை தீர்ப்பாணை ஆணையர் அறிக்கையின் அடிப்படையில் சட்டப்பூர்வமாக பிறப்பிக்கப்பட்டது என்பதையும், அதனை merits அடிப்படையில் பின்னர் சவால் செய்ய இயலாது என்பதையும்..."** உறுதி செய்துள்ளது என்பது தெளிவாகிறது.

15) மேற்கண்ட பரிசீலனையில் இருந்து முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையில் காணப்படும் சொத்து விவர குறைபாடுகள் வெறும் clerical / accidental mistakes மட்டுமே என்பதாலும், அவை மேற்கண்ட தீர்ப்பாணையின் சாராம்சம், தரப்பினர்களிடையேயான பங்கீடு அல்லது நிறைவேற்றத்தன்மையை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:10:02 +0530

பாதிக்கக்கூடிய அடிப்படையான குறைபாடுகள் அல்ல என்பதாலும் 02.03.1988–ம் தேதிய முதல்நிலை தீர்ப்பாணையும், 08.11.2001–ம் தேதிய இறுதிநிலை தீர்ப்பாணையும் Inexecutable decree என அறிவிக்க இயலாது என இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

16) எனவே, நமது உரிமையியல் நடைமுறை சட்டம் Section 47–ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கப்படத்தக்கது அல்ல என இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

17) **இறுதியாக:–**

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத் தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 12 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:10:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**1. மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :–** இல்லை

**2. மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :–**

| ஆவண எண். | நாள் | சான்றாவணங்கள் |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 02.03.1988 | தென்காசி, சார்பு நீதிமன்றம் மு.வ.எண்.41/1981 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணை – நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 08.11.2001 | சங்கரன்கோவில், சங்கரன்கோவில் கூடுதல் மாவட்ட |

| | | |
|---|---|---|
| | | உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.5/1996 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணை – நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | –– | தென்காசி, சார்பு நீதிமன்றம் மு.வ.எண்.41/1981 வழக்கின் பிராது – நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | – | அசல் வழக்கு எண்.5/1996 வழக்கின் வழக்கு பதிவேட்டு விபரங்கள் – நீதிமன்ற சான்றிட்ட நகல் |

**3. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–** இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:10:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

E.A.No.65/2018
in
E.P.No.2/2005
in
O.S.No.5/1996

உத்தரவு (Draft / Fair)

நாள் : 12.06.2026